பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 சித்திரை 5 ஜூ: ஆண்டு 9 இதழ் 66
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 18 4-78

பல்கலைக்கழக ஊழல்கள்: தனிநபர் கமிஷன் நியமனம்

(கொழும்பு)

கடந்த 7 வருடங்களில் பல்கலைக்கழக வளாகங்களில் இடம்பெற்ற ஊழல்கள், மோசடிகள், நிர்வாகச் சீர்கேடுகள் குறித்து விசாரிக்க தனிநபர் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

திரு டி ஜி தயாரத்ன இக்குழுவின் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்வி அமைச்சர் திரு நிஸங்க விஜயரத்ன கல்வியமைச்சில் நேற்று நடைபெற்ற செய்தி நிருபர்கள் மகாநாட்டில் இதனைத்தெரிவித்தார்.

பல்கலைக்கழக வளாகங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பல்வேறுதரப்பட்ட ஊழல்கள் பணமோசடிகள், குற்றச் செயல்கள் அசம்பாவித சம்பவங்கள் குறித்து இவ்விசாரணைக்குழு விசாரணைகளை மேற்கொள்ளும்.

திரு. தயாரத்ன கல்வி அமைச்சு உட்பட பல அமைச்சுகளின் செயலாளராகப் பணியாற்றியவராவர். மாநாட்டில் பிரதி கல்வி அமைச்சர் திரு லயனல் ஜயதிலகாவும் சமுகமளித்திருந்தார்.

ஆசிரிய கலாசாலைகள்

2ம் திகதி ஆரம்பம்

ஏற்கனவே அறிவித்தபடி பல்கலைக்கழக வளாகங்கள் இம்மாதம் 24ம் தேதி ஆரம்பிக்கும் என்று தெரிவித்த அமைச்சர் மூடப்பட்டுள்ள ஆசிரியபயிற்சிக் கல்லூரிகள் அடுத்த மாதம் 2ம் திகதி திறக்கப்படும் என்றும் தெரிவித்தார். [ம]

முருங்கன்துப்பறியும் பொலிஸ்படுகொலையின் எதிரொலி

விசேஷ பொலிஸ் குழு யாழ். நகர் வந்தது!

கருஜ்களில் திடீர்சோதனை; வாகனங்களும் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

முருங்கன் துப்பறியும் பொலிஸார் கொலை தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு ஒரு ஏ, எஸ். பி. தலைமையில் விசேடபொலிஸ்கோஷ்டியொன்று நேற்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்தது. இக்கோஷ்டியினர் நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள கருஜுகளுக்குச் சென்று சோதனை நடத்தினர், கடத்தப்பட்ட சி. ஐ. டி. காரின் உதிரிப்பாகங்கள் இங்குகொண்டுவரப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் பொலிஸார் பல பிரிவுகளாக சென்று வாகனங்களைச் சோதனையிட்டு வருகின்றனர்.

முருங்கன் துப்பறியும் பொலிஸார் படுகொலைதொடர்பாக சோதனைநடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் துப்பறியும் பொலிஸ் கோஷ்டியினர் நேற்றுத் தீவுப்பகுதி பஸ் ஒன்றில் வெடிமருந்துகளையும் சில பயங்கர ஆயுதங்களையும் தோட்டாக்களையும் கைப்பற்றினர்கள்.

யாழ். தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. ரெரன் பெரேரா தலைமையில் சென்ற கோஷ்டியினரே இவற்றைக் கைப்பற்றினர்.

சந்தேகத்தின்மீது ஒருவர் கைது!

பண்ணைப்பாலத்துக்கருகில் பஸ் தடுத்து நிறுத்தப்பட்டு உடனடியாக பொலிஸ் நாய் வரவழைக்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக அந்த பஸ்ஸில் வந்த ஐயர் ஒருவரைப் பொலிஸார் சந்தேகத்தின்மீது கைதுசெய்து காவலில் வைத்துள்ளனர், வெடிமருந்துகளையும் தோட்டாக்களையும் கொண்ட பார்சலை இந்த பஸ்ஸிலேயே பொலிஸார் கண்டுபிடித்தனர்.

பார்சல் பற்றித் தமக்கொன்றும் தெரியாதென்றும், அப்பார்சல் தம்முடையதல்ல வென்றும் ஐயர் பொலிஸாரிடம் கூறியதாகத் தெரியவருகிறது

(6ம் பக்கம் பார்க்க)

தனியார் பாடசாலைகளுக்கு அரசஉதவி: மே15-ல் மாநாடு

(கொழும்பு)

நாடு முழுவதிலும் உள்ள தனியார் பாடசாலைகளுக்கு அரச உதவிகள் வழங்குவது குறித்து கல்விஅமைச்சர் தற்போது ஆராய்ந்துவருகிறார்.

இத்தகைய தனியார் பாடசாலைகளின் அதிபர்கள், நிருவாகிகளின் மாநாடு ஒன்றை அமைச்சர் அடுத்தமாதம் 15ம் திகதி அமைச்சில் கூட்டுகிறார். நேற்று நடைபெற்ற நிருபர்கள் மகாநாட்டிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். [ம-இ]

அக்கம் பக்கமாக சைக்கிளில் சென்று

வீதிஒழுங்கைமீறிய

50 இளைஞர்களுக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

வீதிகளில் அக்கம்பக்கமாக சைக்கிளில் சென்ற 50 இளைஞர்களுக்கு யாழ் நீதவான் திரு. கே. வி. நவரத்தினம் தலா 25 ரூபா அபராதம் விதித்தார்.

அக்கம்பக்கமாகப் போக்குவரத்தை தடைசெய்யும்விதத்தில் வீதிகளில் சென்ற இவர்களை யாழ் போக்குவரத்துப்

(6-ம் பக்கம் பார்க்க)

சாவகச்சேரி நவத்தின் காரைச்

சோதித்த பொலிசாருக்கு எச்சரிக்கை!

(யாழ்ப்பாணம்)

கைதடிச் சந்தியில் சாவகச்சேரி எம்.பி திரு. வி. என். நவரத்தினத்தின் காரைச் சோதனையிட்ட பொலிஸார், பொலிஸ் அதிபர் திரு. ரண்முத்துகலவினால் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

நேற்று திரு. நவரத்தினம் உறவினர் ஒருவருடனும், மற்றும் சிலருடனும் காரில் வந்தபோது, கைதடிச் சந்தியில் கார் பொலிஸாரினால் மறித்துச் சோதனையிடப்பட்டது.

சாரதியையும், உறவினரையும் இறக்கி முன் சீட்டை சோதனையிட்ட பொலிஸார், பின் சீட்டையும் சோதனையிட வேண்டுமென்றும், திரு நவரத்தினத்தை இறங்கும்படியும் கூறினராம்.

நான் சாவகச்சேரித்தொகுதி எம்.பியென திரு நவரத்தினம் அறிமுகப்படுத்தியபோது, எம்.பியென்றாலும் சோதனையிடவேண்டும் எனப் பொலிஸார் கூறினர்களாம்.

இதன்பின் திரு. நவரத்தினம், பொலிஸ் அதிபர் திரு. ரண்முத்துகலவைச் சந்தித்து பொலிஸார் தன்னை அவமானப்படுத்தும்முறையில் நடந்துகொண்டதாகவும், உடன் நடவடிக்கை எடுக்காவிடில் மேலிடத்தில் தொடர்புகொள்ளப்போவதாகவும் திரு. நவரத்தினம் தெரிவித்ததாகத் தெரிகிறது.

இதைத் தொடர்ந்து, உதவி

(6ம் பக்கம் பார்க்க)

மங்களகரமான
திறப்பு விழா

?

வரி விளம்பரம்

தேவை

கொழும்பு றெஸ்ரோரன் வெயிற்றர், பார்கீப்பர், திறமை வாய்ந்த சமையல்காரர் உடன் தேவை. நற்சாட்சிப்பத்திரத்துடன் நேரில் வரவும். நம் 77, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். 9051

நல்ல நிலையிலுள்ள சவுலெற் அல்லது டொஜ் பெற்றோல் லொறி தேவை. முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். இ. க. க. குருதேவ், "மீரு இல்லம்" மயிலிட்டி. 8970

சேலை அச்சடிக்கப் பழகி வேலை செய்வதற்கும், தைத்தறி நெசவு செய்வதற்கும் பெண்பிள்ளைகள் உடனடியாகத் தேவை. நிலையத்துக்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும். பயிற்சிக் காலத்திலும் வேதனம் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும், வசந்தா ரெக்ஸ்ரயில்ஸ் 42, கல்லூரி வீதி, நீராவியடி யாழ்ப்பாணம். 9007

மேற்பார்வையாளர், லேத்மன் (Lathemen), கம்மாலை வேலை செய்பவர்கள், வெல்டர்கள் Gas & Electric) தேவை அனுபவம் உள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும். ராதா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 9021

விற்பனைக்கு

CE 2984 லொறி V '8' சவளற் எஞ்சினுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: பீ. பேரின்பம், 15, ஆனந்தன் வடலி வீதி, கொழும்புத்துறை. 9049

வகுப்புகள்

புதன்கிழமை காலை 19ந் தேதி G. C. E. (O. L.) கலை, வர்த்தக, விஞ்ஞான ஆவணிப் பரீட்சை மார்கழி பரீட்சைக்குரிய வகுப்புக்களும், A L கலை வர்த்தக வகுப்புக்களும், சுருக்கெழுத்து, தட்டச்சு வகுப்புக்களும், ஆங்கில வகுப்புக்களும் தையல் வகுப்புக்களும் ஆரம்பமாகும். A. L விஞ்ஞான மாலைநேர வகுப்புக்கள் வைகாசி முதலாந்தேதி ஆரம்பமாகும். யாழ்ப்பாணக் கல்விநிலையம், 22, இராமையாச் செட்டியார் லேன், (சாந்தி படமாளிகைக்கு முன்னால்) யாழ்ப்பாணம். 9054

‘‘மன்னார், வவனியாவில் இடமிருந்தும் தொடர்ந்தும்

அனுராதபுரத்தில் வேலை செய்யுமாறு நிர்ப்பந்தம்’’

பாதிக்கப்பட்ட சிற்றூழியர் பற்றி ஆறுமுகம் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

வவனியாவிலும், மன்னாரிலும், ரயில் இலாகாவில் சிற்றூழியர்களுக்கு நிறைய காலி இடமிருந்தது. அனுராதபுரத்தில் கடமையாற்றி பாதிக்கப்பட்ட தமிழ் சிற்றூழியர்களை வவனியாவிற்கும் மன்னாருக்கும் இடமாற்றம் செய்யும்படி மேலிடத்திலும் பணிக்கப்பட்டும் எதுவும் நடக்கவில்லை. இவர்கள் அனுராதபுரத்திலேயே தொடர்ந்து வேலை செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்டனர். அங்கு அவர்கள் துன்புறுத்தலுக்கும், பயத்திற்கும் மத்தியில் பணியாற்ற வேண்டியிருக்கிறது.

பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் சங்க செயலாளர் திரு. கே. எஸ். ஆறுமுகம் சன்சோனி கமிஷன்முன் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

இடைக்கால ஒப்பந்தம் அமுல் செய்யப்படவில்லை.

கொழும்பில் இருப்பிடம் அளிக்கப்படவில்லை. ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டது போல கொழும்பில் வேலை செய்யச் சென்றவர்களுக்கு இருப்பிடம் அளிக்க தீவிர முயற்சி எடுக்கப்படவில்லை.

கொழும்பில் வேலைசெய்யச் சென்றவர்களுக்கு, ஒப்பந்தத்தில் கூறப்பட்டதுபோல அலவுன்ஸ் வழங்கப்படவில்லை. அலவுன்ஸ் வழங்கப்பட்ட சிலரிடம் சுற்றறிக்கையின் பிரகாரம் திருப்பி பெறப்பட்டுள்ளது. இதேநேரம், இதே சூழ்நிலையில் அனுப்பப்பட்ட சிங்கள ஊழியர்களுக்கு இது வழங்கப்பட்டுள்ளது.

நிர்வாகம் பரவலாக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் கணக்காளர் பிரிவு ஆரம்பிக்க முயற்சி எடுக்கப்படவில்லை. சகல இலாகாக்களிலும் நிர்வாகம் பரவலாக்கப்பட்டு, யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டுள்ளது. ஆனால் புகையிரத இலாகா மட்டுமே யாழ்ப்பாணத்தில் பிரிவை திறக்கவில்லை.

வேலைப்பகுதியிலிருந்து வழங்கப்பட்ட தற்காலிக இடமாற்றம் ரத்துச்செய்யப்பட்டுள்ளது,

வருடாந்த இடமாற்றம் இடம்பெற்றபோது பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்கள் பற்றி கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. வருடாந்த இடமாற்றத்திற்கு உரிய காலத்தில் விண்ணப்பிக்கவில்லை என்று கூறப்படுகிறது. இந்த இடமாற்றத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்ட சமயத்தில், இந்த ஊழியர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்தார்கள்.

கடன் வழங்கவில்லை

பாதிக்கப்பட்ட பெரும்பாலான தமிழ் ஊழியர்களுக்கு தாமதக கடன் வழங்கப்படவில்லை இவர்கள் உரிய நேரத்தில் விண்ணப்பிக்கவில்லை என கூறப்படுகிறது. இவர்கள் பாதிக்கப்பட்டிருந்ததினால், உரியகாலத்தில் விண்ணப்பிக்க முடியாமலிருந்தது இதற்கு அகதிகள் முகாமினது சாட்டிபிக்கட்டும், பொலிஸ் அறிக்கை ஒன்றும் தேவைப்பட்டது. அனுராதபுரத்திலும் வடமத்திய மாகாணத்திலும் பாதுகாக்கப்பட்ட இந்த ஊழியர்கள் இப்படியான சார்ட்டிபிக்கட்டைப் பெறமுடியாமல் இருக்கிறார்கள். ஏனெனில், அனுராதபுரத்தில் உத்தியோகபூர்வமான அகதிகள்முகாம் ஒன்று இயங்கவில்லை. அத்துடன் கலவரகாலத்தில் அங்குள்ள எந்தப்பொலிஸ் நிலையத்திலும் தமிழ் ஊழியர் எவரும் சென்று புகார்செய்யமுடியாத நிலை இருந்தது.

கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்கள் என இலாகா தலைமைப்பீடம் அல்லது கிளை இலாகா உறுதிப்படுத்தும் பட்சத்தில், அதனை கடன் வழங்குவதற்கு போதிய அத்தாட்சியாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று விடுக்கப்பட்டகோரிக்கை ஏற்கப்படவில்லை.

77 நவம்பருக்கான சம்பளமும், வேலைக்குச் செல்லும் காலம்வரைக்குமான சம்பள சிலருக்கு வழங்கப்படவில்லை.

ரயில்நிலைய அதிபர்கள்போன்ற சில உத்தியோகத்தர்கள் வேலையைப் பாரம் ஏற்பதற்கு தாமதம் ஏற்பட்டது. நிர்வாக பொதுமுகாமையாளருக்கும், சங்கத்திற்குமிடையில் நடந்த பேச்சுவார்த்தை காரணமாக இந்ததாமதம் ஏற்பட்டது.

அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள பெரும்பாலான பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு உரியநிவாரணம் அலவன்ஸாக வழங்கப்படவில்லை. இது யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரின் நடவடிக்கையினால் ஏற்பட்டது.

யாழ்ப்பாணம் கச்சேரியில், நாங்கள் நிவாரணம்பெற கியூவில் நின்ற சமயம், சிங்கள ஊழியர்களுக்கு, எவ்வித கஷ்டமுமின்றி இந்த நிவாரண அலவன்ஸ் வழங்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சிங்களவர்களுக்கு கலவரத்தின்போது தாக்கப்படாத போதிலும் நஷ்டம் எதுவும் ஏற்படாத போதிலும் அவர்கள் உடைமைகள் கொள்ளையடிக்கப்படாத போதிலும், அவர்களுக்குநிவாரண அலவன்ஸ் வழங்கப்பட்டது.

இந்த அலவன்ஸ் பெறுவதில் சிங்கள ஊழியர்களுக்கு ஏதாவது கஷ்டங்கள் ஏற்படும் சமயத்தில் யாழ். அரசாங்க அதிபர் நடைமுறைக்கு மாறாக சென்று, அவர்களுக்கு அலவன்ஸ் வழங்க கட்டளையிட்டார்.

இருபது குண்டர்கள்

ஆயுதத்துடன் வந்து தாக்கினர்

(யாழ்ப்பாணம்)

அனுராதபுரத்தைச் சேர்ந்த செம்பற்சோதி குலேந்திரசிங்கம் சன்சோனி கமிஷன்முன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

அனுராதபுரம் பொறியியலாளர் பிரிவில் கடமையாற்றினேன். பீ. டபிள்யு. டி. விடுதியில் இருந்தேன். பயத்தினால் சில சாமான்களை எடுத்துக்கொண்டு நண்பர் வீட்டிற்குச்சென்றேன். அவர் ஒரு பென்சனியர். இங்கிருந்து பார்த்தபோது கொள்ளை தாக்குதல் நடந்துகொண்டிருந்தது. 20 கொள்ளையர் ஆயுதத்துடன் சென்று என் வீட்டை தாக்கினார்கள். பின் மற்றொரு குண்டர்கோஷ்டி தாக்கியது. அப்போது ஒரு குண்டர் தமிழ் குடும்பம் மற்றவீட்டில் தஞ்சமடைந்திருப்பதாக கூறினார். என்னைத் தேடி வந்தார்கள். நாங்கள் கட்டிலுக்குக்கீழ் இருந்தோம். ஒருவர்வந்துஎங்களைக் காட்டினார். மற்றவர்கள் அடித்தார்கள். நண்பர் கலையை - ந்தார். பின் நாங்கள் ஆமிவானில் கச்சேரி போனோம் என்மனைவியும் தாக்கப்பட்டார். பின் யாழ்ப்பாணம் வந்தோம்.

மனைவிசாட்சியம்

அனுராதபுரத்தைச் சேர்ந்த சிவயோகம் குலேந்திரசிங்கம் கூறியதாவது:- தற்போதுசுன்னாகத்திலிருக்கிறோம் ஆகஸ்ட்டில் அனுராதபுரத்தில் இருந்தோம். தமிழர்கள் தாக்கப்படுவதாகவும் வீட்டில் இருப்பது ஆபத்து என்றும்நண்பர் கூறினார் நகைகளை எடுத்துக்கொண்டு கணவரின் நண்பர் தேனுபந்து வீட்டிற்குச் சென்றோம். அங்கிருந்து எங்கள்வீடு கொள்ளையடிப்பதைப் பார்த்தேன்.

தேனுபந்து குடும்பத்தார் எங்களை கட்டிலுக்குக்கீழ் ஒளித்துவைத்திருந்தார்கள். குண்டர்கள் அடித்தார்கள். நகைகள் எல்லாம் பறித்துக் கொண்டு போய்விட்டார்கள். பின் சிகிச்சை பெற்றேன். கோழிப்பண்ணை ஆடு எல்லாம் கொள்ளையடித்து விட்டனர்.

அலவாங்கால் அடித்தார்

தச்சன்மருத மடுவைச் சேர்ந்த ஆறுமுகம் சூரியகுமாரன் கூறியதாவது: ஆகஸ்ட் 23ம் திகதி வீட்டிலிருந்தேன். என்மாமா வீட்டிற்குவந்தார். 2 இராணுவத்தினரும், ஏ எஸ் பி யும் வீட்டிற்கு வந்தார்கள். ஆமிக்காரர் துவக்கால் அடித்து வீட்டுக்காரர் எங்கே? என்று கேட்டார்கள். கமத்துக்கு என்றேன். வீட்டுக்குள் இழுத்துச் சென்றார்கள். றேடியோவை எடுத்து கீழே போட்டு காலால் உதைத்தார்கள். ஏ எஸ் பி கீழே போட்டு உடைத்தார். ஏ எஸ் பி அலவாங்கு எடுத்து இடுப்பில் அடித்தார். நான் விழுந்துவிட்டேன். பின் சேட்டில் பிடித்து தூக்கினார். ஒழுங்கைக்கு அடித்தடித்து கூட்டிப் போனார்கள். குணவீரசிங்கம் இருந்த இடத்திற்கு கூட்டிச் சென்றனர்.

நீர்கொழும்பில் கலவரம்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி கனகேஸ்வரி நடராசா கூறியதாவது: நீர்கொழும்பில் விஜயரத்தின மகாவித்தியாலயத்தில் படிப்பித்தேன். என் கணவருடன் இருந்தேன். நீர்கொழும்பில் கலவரம் நடந்தது.

சட்: உமது வீடு தாக்கப்பட்டதா?- இல்லை.

சட்: நீர் இல்லாதபோது வீடுதாக்கப்பட்டதா?- இல்லை. குருநாகலில் என் சகோதரி வீட்டில்போயிருந்தேன். நான் மேல் மாடியில் இருந்தேன். இரவு பத்து மணிக்கு குண்டர்கள் வந்தனர். என் சகோதரி அடுத்தவீட்டில் போய்ஒளித்துவிட்டார். குண்டர்கள் வீட்டை அடித்து உடைத்தார்கள் அதற்கு பின் என்னையும், பின்வீட்டு ஆட்கள் வந்து கூட்டிச் சென்றனர் மறுநாள் எங்கள் வீட்டிற்குப்போய் அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்தோம் பின் நீர்கொழும்புக்கு போகவில்லை யாழ்ப்பாணத்திற்கு ஜனவரி முதல் இடமாற்றம் கிடைத்தது. நவம்பர், டிசம்பர் மாதசம்பளம் கிடைக்கவில்லை.

கமிஷனர்: ஏன் கிடைக்கவில்லை?- வேலைக்குப்போகாததினால் கிடைக்கவில்லை.

கமிஷனர்: ஏன் நீர்கொழும்பு போகவில்லை?- கணவரும் யாழ்ப்பாணம் வந்துவிட்டார் அதனால் தனியே போகஏலாது பயத்தினால் போகவில்லை.

வடமாகாண விவசாயிகளுக்கு ஓர்

முக்கிய அறிவித்தல்

குருநாகல் சத்தியவாதி ஸ்டோர்ஸ் அன்ட் மோட்டர் டிறன்ஸ்போட்டேஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தார் V. சரவணமுத்து சறத்திலகா அன்ட் கொம்பனி இல. 128, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியடி, யாழ்ப்பாணம் என்பவரை மீண்டும் (FORD) போர்ட் உழவு இயந்திரத்துக்கும் அதன் உதிரிப்பாகங்களுக்கும் வடமாகாண விற்பனையாளராக நியமித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.

விவசாயிகளும் பாவனையாளர்களும் நேர்முகமாகவோ அல்லது கடிதமூலமாகவோ உங்கள் தேவைகளுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

சறத்திலகா அன்ட் கோ.
128, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தியடி, யாழ்ப்பாணம்.
9052

பண்டத்தரிப்பு மீனவர் கூட்டுறவுச் சங்கம்

சித்தங்கேணி

12-4-78-ம் திகதி மு. ப. 10-00 மணிக்கு நடைபெறவிருந்த மேற்படி ஏல விற்பனை தவிர்க்க முடியாத காரணங்களினால் 27-4-78-ம் திகதி மு ப. 10-00 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

இவ் ஏலவிற்பனையில் கலந்துகொள்ளவிரும்புபவர்கள் பெறக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 100/-ஐ சங்க அலுவலகத்தில் 27-04-78-ம் திகதி மு. ப. 10-00 மணிவரை செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம்.

மு. தம்பியையா
பண்டத்தரிப்பு மீனவர் கூட்டுறவு சங்கம், சித்தங்கேணி. தலைவர்
13-4-1978. 9053

ஈழநாடு
The Eelanaadu

"கலவரத்தின்போது யாழ். பஸ் நிலையத்தில் இரண்டு இளைஞர் சுடுபட்டது பற்றி பொலிசார் கவலைப்பட தேவையில்லை"

புத்தாண்டில் மகிழ்ச்சிதரும் செய்தி

நாட்டில் நெல் உற்பத்தி அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து வெளிநாட்டிலிருந்து இறக்குமதிசெய்யப்படும் அரிசியின் தொகையைக் குறைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வெளிவந்துள்ள செய்தி புத்தாண்டில்வந்த மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

இப்போது இறக்குமதி செய்யப்படும் அரிசியில் மூன்றுஇலட்சத்துப் பன்னிரெண்டாயிரம் தொன்களால் குறைப்பதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

பொதுமக்கள் தட்டுப்பாடின்றிநல்லரகஅரிசியைப் பெற்றுக் கொள்வதற்கான முறையில் பலபுதியதிட்டங்களைச் செயற்படுத்த உணவு கூட்டுறவுத்துறை அமைச்சும் காணிவிவசாய அமைச்சும் அவசர நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது.

நெல்உற்பத்தி அதிகரித்தாலும் அந்தந்தமாவட்டத்தில் விளையும் நெல் அந்தந்த மாவட்ட மக்களுக்குக் கிடைப்பதில்லை.

இது மட்டுமல்ல நல்லரக நெல் விளையும் மாவட்டத்தில் இப்போதும் ''ஊத்தைச்சம்பா'' என்று அழைக்கப்படும் பாவனைக்குதவாத அரிசியே வழங்கப்படுகிறது.

ஊத்தைச் சம்பா எப்படித் திரும்பத் திரும்ப சங்கக் கடைகளுக்கு வருகிறதென்பது பற்றி ஒரு ஆராய்ச்சியை நடத்த வேண்டியது அவசியமாகும்.

நெல் கொள்வனவு செய்யப்படும் மாவட்டத்திலேயே நெல்லைக் குற்றி அம் மாவட்டத்திலேயே உள்ள கூட்டுறவுச் சங்கக் கடைகள் மூலம் பாவனையாளர்களுக்கு விநியோகிப்பதற்கும் அரசு ஏற்பாடு செய்திருப்பது பாராட்டுக்குரியது.

நெல் கொள்வனவு செய்யப்படும் மாவட்டத்திலேயே அரிசியை விநியோகிப்பதால் போக்குவரத்துச் செலவுகள் குறைவதுடன் தங்கள் மாவட்டத்திலேயே விளையும் அரிசியைத் தாங்களே சுவைத்து உண்ணும் வாய்ப்பையும் அளிப்பதாகும்.

மாவட்டங்கள் தோறும் அரிசி ஆலைகள் பலவற்றை நிறுவுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டியது அவசியம்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அரிசி ஆலைகளை நிறுவுவதற்கு முன்வருவது பலருக்குவேலைவாய்ப்பளிக்க உதவுவதாக இருக்கும்.

அரிசிஆலைகள் பல கடந்த சில வருடங்களில் மூடப்பட்டன.

இயந்திர சாதனங்களை இறக்குமதி செய்வதற்கும் உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்வதற்கும் அரசாங்கம் அனுமதியளிக்க முன்வந்திருப்பது நல்லது.

நெல்உற்பத்தி அதிகரிப்பதற்கேற்ப நல்ல அரிசி கிடைப்பதற்கு அரிசி ஆலைகள் அதிகரிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

டி. ஐ. ஜி. சொன்னதாக ஜீப் சாரதி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

'பொலிசாருக்கு எதிராக இனிமேல் தனிப்பட்டமுறையில் வழக்குத்தாக்கல்செய்ய முடியாது.

'கலவரத்தின்போது யாழ் பஸ் நிலையத்தில் இரு இளைஞர்கள் சுடப்பட்டது பற்றி பொலிஸார் பயப்படத் தேவையில்லை'

'இரு இளைஞர் மரணம் தொடர்பான மரணவிசாரணைத் தீர்ப்பையிட்டு பொலிசார் அஞ்சத்தேவையில்லை. நான் பிரதிவழக்குத் தொடருனருடன் பேசிவிட்டு வந்திருக்கிறேன்'

77 அக்டோபர் 12ந் திகதி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நடந்த வகுப்பில் டி. ஐ ஜி. அனே செனிவரத்தின கூறியதாக யாழ்ப்பாணம் பொலிஸ் ஜீப் சாரதியான செல்லையா சுப்பிரமணியம், சன்சோனி கமிஷன்முன் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

கொடிகாமத்தைச் சேர்ந்த பொலிஸ் ஜீப் சாரதி செல்லையா சுப்பிரமணியம் கூறியதாவது! 76ம் ஆண்டு முதல் யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்தில் கடமையாற்றினேன்.

கடந்த தேர்தலின்போது இங்கு கடமையாற்ற தென்னிலங்கையிலிருந்து பொலிசார் வந்திருந்தனர். தேர்தல் முடிந்த மறுநாள் யாழ் சுப்பிரமணியம் பூங்காவிற்கு முன்னால் உள்ள கலாயோகி ஆனந்தக்குமாரசாமியின் சிலையைப் பொலிசார் தாக்கி, தகர்த்தார்கள். நான் பழைய பொலிஸ் நிலைய விருந்தையில் நின்று பார்த்தேன்.

பெரமுனை ஈடுபட்டார்

சப்இன்ஸ்பெக்டர் பெரமுனையும் அதில் ஈடுபட்டார். இரவு 1மணிக்கு இது நடந்தது.

கமிஷனர்: நீர் நேரில் கண்டீரா?-ஆம். 76ம் ஆண்டு ஆகஸ்ட் 21ந் திகதி திரு அமிர்தலிங்கம் பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் பொலிசாரால் தாக்கப்பட்டார். மறுநாள் டி. ஐ. ஜி. அனசெனிவரத்தின யாழ்ப்பாணம்வந்தார். வகுப்பு ஒன்று நடத்தினார். நானும் அந்த வகுப்புக்குச் சென்றேன். செம்மணியில் நடந்த துப்பாக்கிச்சூடு பற்றியும், திரு அமிர்தலிங்கம் தாக்கப்பட்டதுபற்றியும் டி ஐ ஜி பிரஸ்தாபித்தார். பொலிஸ் நிலையத்தில் நடப்பதை எவரும் வெளியில் சொல்லக்கூடாது என அவர் கட்டளையிட்டார்.

சிவரத்தினம் மீது சந்தேகம்

திரு. அமிர்தலிங்கத்திற்கு அடித்த சிங்களப்பொலிசாரின் பெயரை கன்ஸ்டபிள் சிவரத்தினம் (4026) சொல்லிக்கொடுத்திருப்பார் என சந்தேகப்பட்டனர். அன்றிரவு சிவரத்தினத்தின் அறை உடைத்துத் திறக்கப்பட்டு அவரது 'யூனிபோம்' எரிக்கப்பட்டு வாய்க்காலுக்குள் வீசப்பட்டது.

76 ஆகஸ்ட் 25ந் தேதி சிவரத்தினம் இச்சம்பவம்பற்றி தகவல்புத்தகத்தில் 'என்றி' போட்டார். எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால் சிவரத்தினம் பதுளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

77 ஆகஸ்ட் 13ந்தேதி டி. ஐ. ஜி. அனசெனிவரத்தின யாழ்ப்பாணம் வந்தார். பொலிஸ் நிலையத்தில் ஒரு வகுப்பு நடத்தினார்.

கொழும்பு மாநாடு

அதற்கு முதல்நாள் பிரதி பாதுகாப்பு அமைச்சர் திரு. வரப்பிட்டியா கொழும்பில் ஒரு மாநாட்டை நடத்தினார். அதற்கு யாழ். எஸ்.பி. செனிவரத்தின கொழும்புசென்றிருந்தார். எஸ்.பி செனிவரத்தின திரும்பிவரமுன், டி ஐ ஜி அனசெனிவரத்தின ஆகஸ்ட் 13ல் யாழ் வந்தார். எஸ் பி. செனிவரத்தின மாநாடு முடிந்து ஆகஸ்ட் 14ல் யாழ்ப்பாணம் வந்தார்.

டி. ஐ. ஜி. செனிவரத்தின வகுப்பில் 'யாழ்ப்பாண இளைஞர்களின் விளையாட்டுக்கு இடமகொடுக்கக்கூடாது என்றும் அதனைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது' என்றார்.

இறந்த சிவகுமாரனுக்குச் சிலை எடுத்துள்ளார்களென்றும் அவர் எப்படியானவர் என்று சார்ஜன் நடராஜா கூறுவார் என்றும் டி. ஐ. ஜி. சொல்லி நடராஜாவைப் பார்த்தார். அந்தவகுப்பிலிருந்த நடராஜா எழுந்து 'சிவகுமாரன் துரையப்பா காருக்கு குண்டு வைத்தார். எஸ். பி சந்திரசேகராவுக்கு குண்டுவீசினார். வங்கியில் கொள்ளையடிக்கமுயற்சித்தார்' எனக் கூறினார்.

சிவகுமாரன் கூடாத பேர்வழியென்றும் அவருக்கு இவர்கள் 'தியாகி' என்று சிலை எடுத்திருக்கிறார்கள் என்றும் டி. ஐ. ஜி. கூறினார்.

கூட்டணிக்கு பணஉதவி

பின் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு தமிழ்ப் பொலிசார் பணம்கொடுப்பதாகத் தகவல் கிடைத்திருப்பதாகவும் அது கண்டுபிடிக்கப்பட்டால் தமிழ் பொலிசார்உடனடியாக தென்பகுதிக்கு மாற்றப்படுவார்கள் என்றும், அங்கு அவர்களுக்கு என்ன நடக்குமென்று சொல்ல முடியாதென்றும் டி. ஐ. ஜி. கூறினார்.

சட்! தமிழர் கூட்டணிக்கு நீர் ஏதாவது நிதியுதவி அளித்திருக்கிறீரா?-எனக்குப் பணம் தந்தால் வாங்குவேன். நான் கொடுக்கவில்லை. இவரின்பேச்சினால் தமிழ்ப் பொலிசார் மனவருத்தமடைந்தார்கள். இது தமிழ், சிங்கள பொலிசார் மத்தியில் ஒரு பாகுபாட்டை ஏற்படுத்தியது சிங்களப் பொலிசார் இதுபற்றி உணர்ந்திருக்கலாம்.

சட்! டி. ஐ. ஜி. இங்கு வரும் போது, அவர் வரவு பற்றியும் வகுப்பு நடத்துவது பற்றியும் புத்தகத்தில் எழுதப்படுவதுண்டு. 77 அக்டோபரில் வந்ததுபற்றியும், வகுப்பு நடத்துவது பற்றியும் எழுதவில்லை?

கமிஷனர்: 77 அக்டோபரில் ஒருவகுப்பு நடந்தது?

சட். சண்முகலிங்கம்: ஆம் எஸ். பி. ரன்முத்துகல அப் மாநாட்டில் கலந்து கொண்டதாக இங்கு சொல்லியிருக்கிருர்.

ஜீப் சாரதி சுப்பிரமணியம் தொடர்ந்து கூறியதாவது! ஆகஸ்ட் 15ம் திகதி நான் யாழ்ப்பாணம் பொலிஸிலிருந்து கோப்பாய் பொலிசுக்கு சென்றேன். அங்கு 20 நாட்கள் வேலைசெய்தேன் கலவரம் நடந்தபோது நான் யாழ்ப்பாணம் பொலிஸில் இருக்கவில்லை.

ரேடியோ இணைப்பு

யாழ். பொலிஸ் நிலையத்தில் றேடியோ இணைக்கப்பட்டுள்ளது கோப்பாய் பொலிஸ் நிலையத்திலும் றேடியோ இணைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து மட்டுமல்ல எங்கிருந்து தகவல் அனுப்பப்பட்டாலும் கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கும்.

ஆகஸ்ட் 16ம் திகதி கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு ஒரு றேடியோ தகவல் வந்தது. அதனை நானும் கேட்டுக்கொண்டிருந்தேன். ஆனைக்கோட்டைக்கு சென்ற பொலிசார் ஒட்டுமடத்தில் சுடப்பட்டார்கள் என்று அந்தத் தகவல் இருந்தது. பண்ணையில் நடந்ததாக அத்தகவல் சொல்லவில்லை. ஆனால் இங்கு சாட்சியங்களில் பண்ணையில் நடந்ததாக கூறப்பட்டது தெரியும்.

டி.ஐ. ஜி. யின் வகுப்பு

அக்டோபர் 12ம் திகதி டி. ஐ. ஜி. அன செனிவரத்தின யாழ்ப்பாணம் வந்தார். திரு. ருத்திரா ராஜசிங்கம் இணைப்பு அதிகாரியாக கடமையாற்ற சென்ற மறுநாள் திரு. அன செனிவரத்தின யாழ்ப்பாணம் வந்தார். வகுப்பு ஒன்று நடத்தினார். அந்த வகுப்பில் நானும் கலந்துகொண்டேன். கலவரத்தின்போது கடமையாற்றிய பொலிசாருக்கு அவர் நன்றிதெரிவித்தார்.

பஸ் நிலையத்தில் கலவரத்தின்போது இரு இளைஞர் சுட்டுக்கொல்லப்பட்டது பற்றி பொலிசார் பயப்படதேவையில்லையென்றும் டி. ஐ. ஜி. கூறினார்.

மரணவிசாரணையில் நீதவான் பொதுவாக அப்படித்தான் தீர்ப்பளிப்பாரென்றும், அதுபற்றி பயப்படதேவையில்லையென்றும் தான் பிரதி வழக்கு தொடுநருடன் அது பற்றி கதைத்துவிட்டு வந்திருப்பதாகவும் டி ஐ ஜி. கூறினார்.

இனிமேல் பொலிசாருக்கு எதிராக தனிப்பட்ட முறையில் வழக்குதாக்கல் செய்ய முடியாது என்றும் அவர் கூறினார்.

தனிப்பட்ட வழக்கு

பொலிசார் யாழ்ப்பாணத்தில் கஷ்டமான சூழ்நிலையில் கடமையாற்றுவதாக பொலிஸ் அதிபர் தனக்கு கூறியதாகவும் கஷ்டப் பிரதேசத்தில் கடமையாற்றுபவர்களுக்கு அலவன்ஸ் பெறக்கொடுக்க தான் நடவடிக்கை எடுப்பதாகவும் டி. ஐ. ஜி. கூறினார்.

அரச சட்டத்தரணி சரத் சில்வா; அக்டோபர் 12-ம் திகதி டி. ஐ. ஜி. நடத்திய வகுப்பில் பொலிஸ் அதிபர் ரன்முத்துகலவும் இருந்தார்? ஆம்.

சட்: துப்பாக்கிசூடு பற்றி பிரதி வழக்கு தொடுநருடன் கதைத்ததாகவும் டி ஐ ஜி கூறினார்? ஆம்.

சட், எப்பொழுது நீர் ஓய்வுபெற்றீர் மார்ச்மாதம் 2ம் திகதி.

சட்: நீர் ஒரு பொலிஸ் சாரதியா? ஆம்

சட்! டி ஐ ஜி நடத்தும் வகுப்பிற்கு பொலிஸ் ஜீப் சாரதியும் செல்வதுண்டா? ஆம் எல்லாரும் போவதுண்டு.

சட் பார்லட்! ஒட்டுமடத்தில் பொலிசாருக்கு சூடுநடந்ததாக றேடியோ தகவல் கூறியது? ஆம்

சட்! ஒட்டுமடம் எங்கு இருக்கிறது? பொலிஸ் நிலையத்திலிருந்து 2 மைல் தூரத்தில்.

சட்! பண்ணையில் தான் பொலிஸ் விடுதியிருக்கிறது? ஆம்.

சட்! பண்ணையில் சூடு விழுந்ததாக இங்கு கூறப்பட்டது? ஆம்

சட்: சண்முகலிங்கம்! 2 இளைஞரை யாழ்ப்பாணத்தில்

[4-ம்பக்கம் பார்க்க]

மணிவாக்கு

எத்த வழக்கிலும் பக்கஞ் சாராமல், நடுவு நிலைமையுடன் சொல்ல வேண்டியவற்றை சொல்லுவாயாக. — ஔவையார்.

யாழ். ரோட்டரி நடத்தும்
பஸ் நடத்துநர் தெரிவு
கூப்பன்

நடத்துநரின் பெயர் ....
பதிவு இலக்கம் ....
அனுப்புபவரின் பெயர் ....
அனுப்புபவரின் விலாசம் ....
திகதி ....
ஒப்பம்

இக்கூப்பனைக் கத்தரித்து பூர்த்திசெய்து டாக்டர் பா. சோ பாரதி, 24, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பவேண்டும். கூப்பன் இன்றி அனுப்பப்படும் தெரிவுகள் நிராகரிக்கப்படும். (இ)

"பிரச்னைக்கு அடக்குமுறை பரிகாரமல்ல' எம். ஜி. ஆர். அரசுக்கு

கலைஞர் சாட்டை

சென்னை, ஏப் 17

"தமிழக அரசு முக்கிய பிரச்னைகளில் சரியான விதத்தில் செயற்பட்டுத் தீர்வுகாணாமல் 'வன்முறை' என்ற முலாம் பூசி அடக்குமுறையைக் கையாள்கிறது".

இவ்வாறு திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி தமிழக அரசு மீது குற்றஞ்சாட்டினார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற தொழிலாளர் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில் கலைஞர் மேலும் தெரிவித்ததாவது: "தலைதூக்கும் பிரச்னைகளை தக்க விதத்தில் தீர்த்துவைக்க அரசு முயல வேண்டும். அதனை விடுத்து எதிர்க்கட்சிகள் வன்முறைகளைத் தூண்டுகின்றன என்று மழுப்பி அடக்குமுறைகள் மூலம் பிரச்னைகளைத் தீர்க்க அரசு முயல்வது கண்டிக்கத்தக்கது" என்றார்.

ஒல்லாந்திலிருந்து

3000தொன் உருளைக்கிழங்கு இறக்குமதியாகும்

[கொழும்பு]

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தால் ஒல்லாந்தில் இருந்து 3000 தொன் உருளைக்கிழங்கு இறக்குமதி செய்யப்படவுள்ளது.

இறக்குமதி செய்யப்படவிருக்கும் கிழங்கின் விலை இரண்டு ரூபாயாகஇருக்கும்.

இம்மாத இறுதியில் ஒரு பகுதி கிழங்கு இறக்குமதியாகும்.

மற்றப் பகுதி கிழங்கு அடுத்த மாதம் இறக்குமதியாகும். [உ]

சித்திரைத் திருநாள்

[யாழ்ப்பாணம்]

அரியாலை புனித யூதாததேயு ஆலயத்தின் சித்திரைத் திருநாளுக்கான நவதின ஆராதனைகள் எதிர்வரும் 27-ம் திகதி வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு திருப்பலி பூசையுடன் ஆரம்பமாகவிருக்கிறது. 29-ம் திகதி நற்கருணை ஆராதனையுடன் நவநாட்கள் நிறைவு பெறுகின்றன

30-ம் திகதி காலை 7 மணிக்கு திருநாட் பலிப்பூசையும் திருச்சுருப பவனியும் இடம் பெறும். அதனை அடுத்து நோயாளிகள் ஆசீர் வதிக்கப்படுவர். இதனையொட்டி விசேட பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுஇளது

(கி-அ)

உயர் ஆர்ச்டீக்கனாக நியமனம்

[அரியாலை]

இலங்கைத் திருச்சபையின் யாழ்ப்பாண ஆர்ச்டீக்கனாகப் பணியாற்றிய வணக்கத்துக்குரிய ஜே. ஜே. ஞானப்பிரகாசம் அடிகள் கொழும்புப் பிரிவுக்கு உயர் ஆர்ச்டீக்கனாக நியமனம் பெற்றுள்ளார்.

உயர் ஆர்ச்டீக்கனாக நியமனம் செய்யப்பட்ட அபிசேஷக ஆராதனை கொழும்பு வாழும் மீட்பர் அத்தியட்சாதீன ஆலயத்தில் கொழும்பு ஆயர் அதிவணக்கத்துக்குரிய சுவீதிர பெர்னாண்டோவினால் நடாத்தப்பட்டது.

இடமாற்றம் பெற்றுச்செல்லும் ஆர்ச்டீக்கனுக்கும் அவரது பாரியாருக்கும், நல்லூர் பரி. யாக்கோபு ஆலய மண்டபத்திலும், சுண்டிக்குளி பரி. யோவான் கல்லூரியிலும் பிரிவுபசாரமளிக்கப்பட்டது. [அ]

பொலிஸ் துப்பாக்கிச் சூடு:

"உயர்மட்ட விசாரணை வேண்டும்"

குமரி அனந்தன் கோரிக்கை

மதுரை, ஏப். 17

மதுரையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்கள் குறித்து உயர்மட்ட விசாரணைக்கமிஷன் நியமிக்குமாறு தான் மத்திய அரசைக்கோரப் போவதாக தமிழ்நாடு ஜனதா கட்சித்தலைவர் திரு. குமரி அனந்தன் கூறினார்.

மதுரையில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் நடைபெற்ற இடங்களை அவர் சென்று பார்வையிட்டார்.

ஜனதாகட்சி உறுப்பினர் திரு. வி. தண்டாயுதபாணி "விவசாயிகள் பிரச்னைகளைத் தீர்க்க தமிழக அரசுதவறிவிட்டது" என்று குற்றம் சாட்டினார்.

இச்சம்பவங்கள் பற்றி நீதி விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் கைதான விவசாயிகள் விடுதலை செய்யப்படவேண்டும் என்றும் அவர் கூறினார்.

இத்துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் ஆறு விவசாயிகள் மாண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது [உ]

றொடீஷிய விவகாரம்:

சகல தரப்பினருடனும் யு.எஸ். பிரி பேசவேண்டும்

தென்னுபிரிக்க அமைச்சர் கருத்து

லண்டன், ஏப். 17

றொடீஷிய விவகாரம் தொடர்பாக அங்குள்ள தேசாபிமான முன்னணி உட்பட சகல தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்று தென்னுபிரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. போத்தா கருத்து வெளியிட்டுள்ளார்.

திரு. போத்தா பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் கலாநிதி டேவிட் ஓவனுடனும், அமெரிக்க வெளிநாட்டமைச்சர் சைரஸ் வான்ஸுடனும் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பின்னரே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

றொடீஷிய, நமீபியப்பிரச்னைகளில் சர்வதேச நாடுகள் தலையிட்டு சமாதானத்தீர்வை ஏற்படுத்தவேண்டுமென்றும் அவர் கூறினார்.

கலவரத்தின்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டதுபற்றி இன்னும் வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை? எனக்கு தெரியாது.

சட்: மன்னார்த் கொலை தொடர்பான பைல்களையும் பிரதி வழக்குத்தொடுனர் பெற்றிருக்கிறார்? எனக்குத் தெரியாது.

சஞ்சிகை இறக்குமதிக்கு எதிர்ப்பு

[வெள்ளவத்தை]

இந்திய சஞ்சிகைகளின் இறக்குமதியால் உள்ளூர் சஞ்சிகைகளின் விற்பனைபெரும் பாதிப்புக்குள்ளாகின்றன. அதனால் இந்தியதமிழ் சஞ்சிகை இறக்குமதியை கட்டுப்படுத்தப்பட வேண்டும். உள்ளூர் சஞ்சிகைகளின் வளர்ச்சிக்கு அரசு ஆதரவு நல்கவேண்டும்.

இவ்வாறு பிரதமர் ஆர். பிரேமதாசாவுக்கு புதுயுக கலாமன்றச்செயலாளர் ஜனாப் எம். எம். முஸ்தபா கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

'துருப்புகளை வாபஸ் பெறுவதில் இஸ்ரேல் தயக்கம்"

ஐ. நா. செயலாளர் கவலை

லண்டன், பெப். 17

"தென்லெபனான் பிரதேசத்தில் இருந்து தனது துருப்புகளைத் திருப்பியழைப்பதில் இஸ்ரேல் தயக்கம் காட்டுகிறது" என்று ஐ. நா. பொதுச்செயலாளர் கலாநிதி வால்ட்ஹெய்ம் கவலைதெரிவித்தார்.

கலாநிதி வால்ட்ஹெய்ம் தற்போது லெபனான், இஸ்ரேல், சைப்பிரஸ் ஆகியநாடுகளுக்கான தனது விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

லெபனான். இஸ்ரேல் அதிகாரிகளை அவர்சந்தித்துப்பேச்சுவார்த்தை நடத்தவிருக்கின்றார்.

தென்லெபனான் பகுதியில் ஐ நா. சமாதானப் படையை அதிகரிக்கவேண்டும் என்று தான் சிபார்சுசெய்யப்போவதாக நிருபர்கள் மத்தியில் பேசுகையில் கூறினார். (உ)

இந்திய வளாகங்களில் வன்முறை:

பிரதமர் மொரார்ஜி கடும் எச்சரிக்கை

புதுடில்லி, ஏப் 17

"இந்திய பல்கலைக் கழகங்களில் நடைபெறும் சட்ட விரோத நடவடிக்கைகள் வன்முறைகளை ஒழித்துக்கட்ட தீவிர நடவடிக்கை எடுக்கப்படும், என்று இந்தியப் பிரதம மந்திரி திரு மொரார்ஜி தேசாய் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

புதுடில்லியில் நடைபெற்ற பட்டமளிப்பு வைபவம் ஒன்றில் பேசுகையில் மேலும் கூறியதாவது:

பல்கலைக்கழக வளாகங்களில் வன்முறையில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறேன்' என்றார். [உ]

பனம்பொருள் உணவுப்பண்ட

தொழிற்சாலை அமைக்க முயற்சி

(சங்கானை)

பனம்பழத்திலிருந்து உணவுப்பண்டங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று சங்கானையில் நிறுவப்படவுள்ளது இந்த நிறுவனத்தை அமைக்க வட்டுக்கோட்டைத் தொகுதி முன்னாள் தெங்குபனம்பொருள் உற்பத்தி விற்பனவுச்சங்கத் தலைவரும், சங்கானை ப.நோ.கூ. சங்க நெறியாளர்குழு உறுப்பினருமான திரு இ. சிவரத்தினம் முயற்சிகள் மேற்கொண்டுள்ளார்.

இத்தொழிலை ஊக்குவிப்பதற்கு வட்டுக்கோட்டைத் தொகுதி தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு. தா திருநாவுக்கரசு சகல உதவிகளையும் அளிப்பதாக உறுதியளித்துள்ளார்.

மிகவிரைவில் ஸ்தாபிக்கப்படவிருக்கும் இந்த ஸ்தாபனத்திற்குத் தேவையான பனம்பழங்கள் சங்கானையிலும் அதனையடுத்துள்ள கிராமங்களிலும் இருந்து எதிர்வரும்கால போகத்தில் கொள்வனவு செய்யப்படும். இந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும்பட்சத்தில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் உற்பத்திப்பொருட்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதால் அந்நியச்செலாவணி மிச்சப்படுத்தவும் ஏதுவாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

ஓய்வு பெறுகின்றார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற முதலியார் திரு எம் எஸ் கந்தசாமி, 35 வருட சேவையின் பின், அடுத்த மாதம் 3ம் திகதி முதல் ஓய்வு பெறுகின்றார். இவர் இன்றுடன் லீவில் சென்றுள்ளார். இவர் நப்பர் கமிஷன் இலாகாவில் 43ம் ஆண்டு சேர்ந்தார். அதன்பின் நிதியமைச்சில் 49ம் ஆண்டு சேர்ந்தார். முல்லைத்தீவு பிஸ்கால் அதிகாரியாக 50ம் ஆண்டுமுதல் 61ம்ஆண்டு வரை கடமையாற்றினார். பின் கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் கடமையாற்றினார். பின் மேல் நீதிமன்ற முதலியாராகக் கடமையாற்றினார்.

சன்சோனி ல்மிஷன் முதலியாராக தற்போது கடமையாற்றி வருகிறார்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

"ஹரிஜனர் மேம்பாட்டிற்கு தமிழகஅரசு உழைக்கிறது"

சத்தியவாணிமுத்து பேச்சு

சென்னை, ஏப். 17

'தமிழக அரசு ஹரிஜனர் நல்வாழ்வுக்காக பல நல்ல திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது 'என்றுராஜ்ய சபை உறுப்பினர் திருமதி சத்தியவாணிமுத்து கூறினார்.

சென்னையில் நடைபெற்ற டாக்டர் அம்பேத்கார் நினைவு விழாவில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

கர்நாடக வர்த்தகத் துறை அமைச்சர் திரு. பகவர்லில் அம்பர் பேசுகையில், 'பல இடங்களிலும் வாழும் ஹரிஜனர்கள் ஒன்றுபட்டு வாழ வழிகிடைக்க வேண்டும். ஹரிஜனர்க்கு இழைக்கப்படும் அநீதிகள் நீங்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்றார்.

அம்பேத்காரின் உருவச் சிலையையும் அமைச்சர் திறந்து வைத்தார். (உ)

வெலிங்டன் (மானிப்பாய்)
தினசரி
6-30, 9-30
சிவாஜி - மஞ்சுளா
மனிதனும்
தெய்வமாகலாம்

நாகம்மாள் (சுன்னாகம்)
தினசரி
6-45, 10-00
விஜயகுமாரி
நடித்த
தாயில்லாக்குழந்தை

Now Showing
Rio (Jaffna) (Phone; 7607)
Krakatova East
Java

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30,
சிவாஜி - சாவித்திரி
நடித்த
எல்லாம் உனக்காக

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
கிரகப்பிரவேசம் (கலர்)

லிடோ போன்: 7692 வெற்றிநடை போடுகிறது
(யாழ். நகர்)
சிவபாதவிருதயர், சந்திரகலா
நடித்த
தென்றலும் புயலும்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர், விஜயா, நாகேஷ்
நடித்த
நல்லநேரம் (புதிய பிரதி)

3வது ஜனத்திரள் வாரம்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர். - பத்மினி - வீரப்பா
நடித்த
விக்கிரமாதித்தன்
(புதிய பிரதி)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா,
விஜயகுமார், நிர்மலா, அசோகன்
நடித்த
ஜானகி சபதம்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.--வாணிஸ்ரீ
நடித்த
ஊருக்கு உழைப்பவன்

Regal (Jaffna) Daily 4-45, 7-00 and 9-30 p.m.
Kirk Douglas Richard Harris
in
Heroes of Telemark
(Colour Scope—war film's)

3-வது வெற்றி வாரம்
ராணி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஏ. ஈ. மனோகரன்-சந்திரகலா
வாடைக்காற்று

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி நடிக்கும் கந்தன்கருணை ஈஸ்ட்மன் கலர்
விசேட படக்காட்சி: தினசரி காலை 8-30 மணிக்கு மட்டும்
இறந்த ஹாஸ்ய நடிகர் சார்லி சப்ளினின்
'BEST OF
CHARLIE CHAPLIN'

"இனிமேலும் நாம்

கள்ளத்தோணி என்ற சொல்லைக் கேட்டுக்கொண்டிருக்கமுடியாது நாம் வாழ எமக்கு நாடு தேவை"

— 'அமிர்'

(மட்டுவில்)

"ஓர் இனம் வாழவேண்டுமானால், அந்த இனத்தின் மொழி, கலை, கலாச்சாரம் மட்டும் வாழ்ந்தால் போதாது. அந்த இனத்திற்கு ஒரு நாடு வேண்டும். அதேபோன்று எமது இனம் வாழ எமக்கொரு நாடு வேண்டும். எம்மைக் கள்ளத்தோணிகள் என்று கூறுவதை இனிமேலும் நாம் கேட்டுக்கொண்டிருக்க முடியாது. எமது இளம் சந்ததியினர் மத்தியிலே தமிழர் வந்தேறு குடிகள் என்று பிரச்சாரம் செய்யப்படுகிறது. அந்தப் பொய்ப் பிரசாரத்தை அவர்கள் மறந்து நாம் ஆண்ட இனம் என்பதை உணர வைக்கவேண்டும்''.

இவ்வாறு சாவகச்சேரியில் நடைபெற்ற புதுவருட விளையாட்டுவிழாவில் உரை நிகழ்த்திய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார். தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு தென்மராட்சி விளையாட்டுக்கழகத்தினர் ஒரு 'தேசிய' விளையாட்டு விழாவை ஒழுங்கு செய்திருந்தனர்.

சாவகச்சேரி டச்சு வீதியில் சிவகுமாரன் நினைவு நூல்நிலையத்தோடு இணைந்த விளையாட்டு மைதானத்தில் இந்த விழா சமூகஜோதி திரு. எஸ். கே. மயில்வாகனம் தலைமையில் நடைபெற்றது. சாவகச்சேரி எம். பி திரு. வ. ந. நவரத்தினம், நகரசபை விசேட ஆணையாளர் திரு. க. நவரத்தினராஜா, சட்டத்தரணி திரு. செ. அம்பிகைபாலன், தென்மராட்சிப்பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. சு. முருகவேள், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திரு அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"கடந்த ஆண்டு எங்களுக்கு அடுத்தடுத்து கசப்பான அனுபவங்கள் பல ஏற்பட்டன. எமது தமிழ்த் தலைவர்களை ஒருவர் பின் ஒருவராக இழந்தோம். ஆகஸ்ட் கலவரத்தின்போது இடம்பெற்ற கொலை, கொள்ளை, கற்பழிப்புப்போன்ற வன்செயல்கள் எமக்குக் கடந்த 2500 ஆண்டுகளில் ஒருபோதும் கண்டும் கேட்டுமிராத புதிய அனுபவங்களைக் கொடுத்துள்ளது. ஆகவே நாம் அந்த ஆண்டை இலகுவில் மறந்துவிட முடியாது. இப்புத்தாண்டு எமக்கு நன்மைகளையே விளைவிக்கும் என்பது எமது நம்பிக்கை.

வீரப் பரம்பரை

விளையாட்டுக்களைத் தமிழன் ஒரு வெறும் விளையாட்டாகக் கொள்வதில்லை. ஆயகலைகள் 64ல் ஒன்றாகவே கருதிப் போற்றி வளர்த்துவருகிறான். உடலுறுதி வீரம்பாய்தல் ஏற்றம், குதிரையோட்டம், கப்பல் ஓட்டுதல், வேல் வித்தை, வாள் வித்தை இவற்றையெல்லாம் தமிழன் வீரவிளையாட்டுக் கலையாகவே மதித்துப்போற்றி வளர்த்து வருகிறான். இப்படியான ஒரு வீரபரம்பரை தமிழ்ப்பரம்பரை. இந்த வீரம்பரம்பரை 9161ம் ஆண்டில் அந்நியர் ஆட்சிதலை தூக்கியதால் சிதைவுற்றது.

எமது பாகம் எமக்கு கிடைக்கவில்லை

போர்த்துக்கேயர் ஆண்டனர்; ஒல்லாந்தர் ஆண்டனர்; தொடர்ந்து ஆங்கிலேயர் ஆண்டனர். ஆங்கிலேயருக்குப் பின் எங்கையில் வரவேண்டிய பாகம் எமக்குக் கிடைக்காமல் போய்விட்டது. தொடர்ந்தும் எமக்கு அந்நிய ஆட்சிதான். எமது பொருளாதாரம், மொழி, மதம், கலை, கலாச்சார உரிமைகளை இழந்து கடந்த 30 ஆண்டுகளாகவாழ்கிறோம். ஆனால் தொடர்ந்தும் இப்படியேதான் வாழவேண்டுமென்ற நியதி எம் இனத்திற்கில்லை.

கிறிஸ்துவுக்கு முன் தமிழன் ஆண்டான். ராஜராஜ சோழன், ராஜராஜராஜேந்திரசோழன் காலத்தில் இந்த நாட்டைத்தமிழன் 90ஆண்டுகள் தொடர்ந்து ஆண்டுவந்திருக்கிறான். இந்த உண்மையை சிங்கள சரித்திரமான மஹாவம்சமே உறுதிப்படுத்தியுள்ளது.

வன்செயலுக்கு முகவுரை

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் எஸ் ஆர் ஜெயசூரியா என்ற பேராசிரியர் தமிழர் வந்தேறு குடிகளென்று ஒரு ஆங்கிலத் தினசரியில் கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார். அவரின் கட்டுரை வன்செயல்களுக்கு முகவுரையாக அமைந்துவிட்டது. அவர் தீட்டியவழிவகைகளையே கையாண்டு அந்தவழியிலேயே வன்செயல் அத்தியாயத்தை முடித்துக் கொண்டார்கள். நாம் வந்தேறு குடிகளல்ல, என்பதை எமது இளைய சமுதாயம் உணரவேண்டும். அப்படி அவர்கள் உணரத் தவறினால், எமது இனம் சுதந்திர இனமாக வாழ முடியாது.

பௌத்தம் இலங்கைக்குவர முன்பே தமிழன், திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முனீஸ்வரம் போன்ற ஈஸ்வரங்களை அமைத்து அதன் மத்தியிலே ஆண்டுவந்தவன் என்பததயும் எம் இளைய தலைமுறைகள் உணரவும், சுதந்திரதாபம் கொண்டு, எமது விடுதலைக்காக உழைக்கவும் வேண்டும். இதன் மூலமே தமிழன் வந்தேறுகுடியல்ல, கள்ளத்தோணி அல்ல என்பதையும் நிரூபிக்க முடியும்.

சாவகச்சேரி நவம் உரை

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில் ஆகஸ்ட் கலவரம் எம்மைப் பெரிதும் பாதித்துவிட்டது. எமது இனத்திற்கு அது ஒரு பேரிழப்புத்தான். ஆனால் உலக வரலாற்றை ஒப்பிட்டுப்பார்த்தால் அது எம்மை மேலும் எமது சுதந்திரத்துக்காகஉழைக்கத் தூண்டும் தூண்டுகோலாக உள்ளது.

விசேட ஆணையாளர் திரு. க. நவரட்ணராசா, சட்டத்தரணி திரு செ அம்பிகைபாலன் உதவி அரசாங்க அதிபர் திரு. சு. முருகவேள், விளையாட்டுச் செயலாளர் திரு. மயில்வாகனம் உட்பட பலர் பேசினர்.

அமரர் செல்லப்பாவின் ஞாபகார்த்தமாக சட்டத்தரணி திரு. அம்பிகைபாலன் கொடுத்த வெற்றிக் கேடயம் உட்பட பல பரிசில்களையும் கேடயங்களையும் எதிர்க்கட்சித் தலைவரின் பாரியார் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் வழங்கினார். ஈற்றில் கலை கதம்ப நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (இ)

'அரசின் உதவியுடன் கிராமிய வளர்ச்சி'

(யாழ்ப்பாணம்)

சுயநலவாதிகளின் சுரண்டல் தன்மையால், இன்று பொதுக் காரியங்கள் சிறப்பாக நடைபெறமுடிவதில்லை. இதை மக்கள் நன்குணர வேண்டும். இன்றைய அரசு கிராமிய மட்டத்தில் போதிய உதவிகளைச் செய்வதற்கு கிராம முன்னேற்றச் சங்கங்களை நிறுவ முன்வந்துள்ளமையால் நாம் நிறுவ முன்வந்திருக்கும் கிராம அபிவிருத்திச் சங்கம் மூலம், அரசின் நன்மைகளைப் பெறக்கூடியதாக இருக்கும். இதனால் கிராமிய மக்கள், வேலைவாய்ப்பை பெற முடியும்" என காரைநகர் சைவமகாசபை மண்டபத்தில் நடைபெற்ற காரைநகர் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் திரு வை. சுந்தரமூர்த்தி பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்வைபவம் திரு. கு. பொன்னையா தலைமையில் நடைபெற்றது.

அவர் தலைமையுரையில் பேசும்போது கூறியதாவது" உண்மையாக நடந்து அருள் பெற சக்திதான் உதவவேண்டுமென்றார்.

வைபவத்தில், ஆ. கனகசபை உயபட பலர் உரையாற்றினர். கிராமத்தில் வேலையற்றிருக்கும் வாலிபர்கள் யுவதிகளின் பட்டியலை தெரிவு செல்வதற்கான குழுவொன்றும் வெளியாகுயது. (செ)

ரூ. 30 லட்சம் ஆயுர்வேத மருந்து! இறக்குமதி

(கொழும்பு)

இவ்வாண்டு 30 லட்சம் ரூபா பெறுமதியான ஆயுர்வேத மருந்துகள் இறக்குமதி செய்யப்படும்.

இறக்குமதி செய்யப்படும் ஆயுர்வேத மருந்துகள் நாடு முழுவதிலும் உள்ள 9 ஆயுர்வேத வைத்தியசாலைகள் மூலமும் உள்ளூராட்சிமன்றங்களின் கீழ் இயங்கும் 259 ஆயுள்வேத மருந்துச்சாலைகள் மூலமும் பொதுமக்களுக்கு வழங்கப்படும்.

இம்மருந்துவகையில் அனேகமானவை இந்தியாவிலிருந்தே இறக்குமதி செய்யப்படும். (இ)

யாழ்ப்பாணத்தில் இந்தோனேஷியஹைகமிஷனர்

[யாழ்ப்பாணம்]

இந்தோனேஷிய ஹைகமிஷனர் திரு. அட்லின் ஜா ஜெனி நேற்று யாழ்ப்பாணம் வந்தார்.

இவர் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு ஏ. ஏ ஜோசப்பை சந்தித்தார்.

தோலகட்டி, காங்கேசன் துறை, கீரிமலை, பருத்தித்துறை ஆகிய இடங்களுக்கும் ஹைகமிஷனர் சென்றார்.

யாழ்ப்பாணத்தில் முக்கிய இடங்களையும் அவர் பார்வையிட்டார். [க-த]

ஆகஸ்ட் கலவரத்தில்

காப்புறுதி செய்து சேதமுற்ற

வர்த்தக ஸ்தாபனங்கள் எத்தனை?

ஆட்சிமன்றத்தில் வவனியா எம். பி. கேட்பார்

(கொழும்பு)

"தீ, களவு, சிவில் குழப்பம் ஆகியவற்றிற்கு எதிராக காப்புறுதிசெய்யப்பட்ட எத்தனை வர்த்தக ஸ்தாபனங்கள் ஆகஸ்ட் இனக்கலவரத்தின் போது பெரும் நஷ்டமடைந்துள்ளன?"

வவனியா எம். பி திரு. ரி சிவசிதம்பரம் தேசிய அரசுப் பேரவை மே மாதம் 4ம் திகதி கூடும்போது மேற்படி கேள்வியை வர்த்தக அமைச்சரிடம் கேட்பதற்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு நஷ்டஈட்டுக் கோரிக்கை சமர்ப்பித்த இத்தகைய வர்த்தக ஸ்தாபனங்களின் சொந்தக்காரர்களில் எத்தனை பேருக்கு இன்றுவரை நஷ்டஈடு கிடைத்துள்ளது?

தமது உடமைகளுக்கும் பொருட்களுக்கும் பெருநட்டம் ஏற்பட்டுள்ள இச் சொந்தக்காரர்களுக்கு உரிய நஷ்ட ஈடு கொடுக்கக்கூடிய இறுதித் திகதியை சபைக்கு சமர்ப்பிப்பீர்களா? என்ற மற்றொரு கேள்விகளுக்கும் திரு. சிவசிதம்பரம் எம். பி. மந்திரியிடம் முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார். [ம-உ]

குளிக்கப்போனவர் கடலுக்குப் பலி!

நண்பர்களின் முயற்சி தோல்வி

(யாழ்ப்பாணம்)

நண்பர்களுடன் திருவடிநிலைக்கு நீராடச் சென்றவர், நீரில் மூழ்கித் தத்தளித்தபோது 3 நண்பர்கள் அவரைக் காப்பாற்ற முயற்சித்தும் பயனளிக்கவில்லை.

உரும்பராயைச் சேர்ந்த பூரணானந்தன் யோகேந்திரனின் மரணவிசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ் மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் மரணவிசாரணை நடத்தினார்.

18 நண்பர்களுடன் நீராடச் சென்றவர், 100 அடி தூரத்தில் நீரில் தத்தளிக்கவே முதலில் க. சுகுமார் என்பவர் சென்று காப்பாற்ற முயற்சித்ததாகவும் பின், த. நற்குணமாணிக்கம் உதவச்சென்றதாகவும், இருவரும் களைப்படைந்த திரும்பிவரவே த. விவேகானந்தன் சென்று சுழியோடி, அவரைக் கரை சேர்த்ததாகவும் விசாரணையில் தெரியவந்தது.

முதலுதவி அளிக்கப்பட்டபின் உடனடியாக யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவர் அங்கு மரணமானார்.

விசாரணையின் பின் விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (க-அ)

இவர்கள்

பழைய ஊழியர்களாகவே கருதப்படவேண்டும்

அஞ்சல் தொலை தொடர்பு சங்கத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

1972ம் ஆண்டு குடியரசு பிரகடனம் செய்யப்பட்டதற்கு முன்பு அரசசேவையில் சேர்க்கப்பட்ட அனைத்து ஊழியர்களுக்கும் உத்தியோக மொழி விஷயத்தில் பழைய ஊழியர்களாகவே கருதப்பட வேண்டும் என்று வற்புறுத்தும் தீர்மானம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ் அஞ்சலக இளைப்பாற்று மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை அஞ்சல் தொலை தொடர்பு உத்தியோகஸ்தர் சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளையில் முதலாவது ஆண்டுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கரவெட்டி அஞ்சலதிபர் திரு க கனகசபாபதி தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

திறைசேரிச் சுற்றறிக்கை 769 இன் தீமைகள் உடனடியாக நீக்கப்பட வேண்டுமென்றும், மென்தொலைபேசி இயக்குநர்களுக்கு உத்தியோக மொழித் தராதரம் 5ம் வகுப்பாகக் குறைக்கப்பட வேண்டுமென்றும் 1971 ஏப்ரல் கிளர்ச்சிக்கு முன்பிருந்த நிலைமைக்கு யாழ் குடாநாட்டின் எல்லா அஞ்சல் அலுவலகங்களின் கடமைநேரங்களை மீளவும் பொதுமக்களின் நன்மை கருதி மாற்ற வேண்டுமென்றும் யாழ்ப்பாண தொலைபேசித் தொடர்பு அபிவிருத்தி அவசியம் குறித்து தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

பாதிக்கப்பட்ட ஊழியர் சங்கத் தலைவர் டாக்டர் ஏ பாலலிங்கம் இக்கூட்டத்தில் பேசும்போது, தபால் தந்தித் திணைக்களத்தின் தமிழ்பேசும் அஞ்சலதிபர்களினதும் ஏனையோரதும் நலன்காக்கும் ஒரே அரணை இச்சங்கம் எதிர்காலத்தில் மிளிரும் என்பதற்கு ஐயமில்லை என்பது இங்கு கூடியிருக்கும் அங்கத்தவர்களின் எண்ணிக்கையும் எழுச்சியும் எடுத்துக் காட்டுகின்றது என்று குறிப்பிட்டதுடன் தமிழ் பேசும் ஊழியர் ஓரணியாக ஏன் அமையவேண்டுமென்பதற்குப் பல நியாயபூர்வமான ஆதாரங்களையும் எடுத்துக் கூறினார். ஆகஸ்ட் இனக்கலவரத்தின் போது நிலைமைசீராக முன்னர் அஞ்சல் திணைக்களத்தின் ஏனைய தொழிற்சங்கங்கள் ஒன்று சேர்ந்து பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியரை வேலைக்குத் திரும்பும்படி வேண்டுகோள் விடுத்தமை அவர்களது பலப் போக்கைத் தெளிவுற எடுத்துக் காட்டியது. எனவே தமிழ் பேசும் ஊழியருக்கென ஒவ்வோர் பிரிவிலும் இதுபோன்ற சங்கங்கள் உருவாக வேண்டுமென வற்புறுத்தினார்.

தாய்ச்சங்க பிரமுகர்களும் ஏனைய மொழிவழித் தொழிற் சங்கங்களான அரசாங்க எழுதுவினைஞர் சங்கச்சார்பில் திரு ஸ்ரீபதியும், அஞ்சல் எழுதுவினைஞர் சங்கச்சார்பில் திரு ஏ தங்கவேலாயுதமும் மற்றும் பலரும் உரையாற்றினார்கள்.

இச்சங்கத்தின் கொள்கை விளக்க வெளியீடான "அஞ்சல் முரசு" இலவசமாக விநியோகிக்கப்பட்டது.

நடப்பு ஆண்டுத் தலைவராக திரு சண்முகலிங்கம் [யாழ். அஞ்சலகம்], செயலாளராக திரு சி நல்லதம்பி [யாழ்.பெரு பேக அத்தியட்சகர் அலுவலகம்] செயற்குழு உறுப்பினர்களும் ஏகமனதாகத் தெரிவாகினர். அமைப்புச் செயலாளர் திரு வி எஸ் தங்கவடிவேல் நன்றிகூறினார்.

சாவகச்சேரி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் அதிகாரி சாவகச்சேரி எம். பியின் வாக்குமூலத்தைப் பதிவு செய்தார்; சம்பந்தப்பட்ட பொலிஸார் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென அறிவுறுத்தப்பட்டனர்.

ஒரிஸாவில் பயங்கர சூறாவளி

500 பேர் பலி!!

புதுடில்லி, ஏப் 17

ஒரிஸ்ஸா மாநிலத்தில் நேற்று வீசிய பயங்கர சூறாவளியினால் 500 பேர் வரை உயிரிழந்துள்ளனர் என்றும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இச் சூறாவளியினால் 5 ஆயிரம் வீடுகள் தரைமட்டமானதுடன் பல கிராமங்கள் அழிந்துவிட்டன என்றும் ஒரு கிராமத்தில் மாத்திரம் 100 பேர் பலியாகியுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

கல்கத்தாவில்

கல்கத்தாவிலும் நேற்று மாலை பலத்த புயற்காற்று சுமார் 15 நிமிடங்கள் வீசியதாகவும் அறிவிக்கப்பட்டது. [இ]

"பொருளாதார திட்டமின்றி முன்னேறமுடியாது"

(வெள்ளவத்தை)

பொருளாதார திட்டமில்லாத எந்த ஒரு கட்சியும் நாட்டை முன்னேற்றிவிட முடியாது. பிரிவினைவாதிகளால் தமிழ்பேசும் மக்களை வழிநடத்தமுடியாது. தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வழங்குவதற்கு அன்றும் இன்றும் போராடி வருபவர்கள் இடதுசாரி இயக்கங்களே.

இவ்வாறு சமசமாஜக்கட்சியின் மத்தியகமிட்டி உறுப்பினரும் தொழிற்சங்கவாதியுமான திரு வி. எஸ். ராஜா குறிப்பிட்டார்.

கொழும்பு மேற்குத்தொகுதி சமசமாஜ வாலிபமுன்னணி நடத்திய கருத்தரங்கில் திரு. ராஜா தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:

கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்காக அவர்களின் உரிமைக்காக போராடியவர்கள் சமசமாஜக்கட்சியினரே இனக்கலவரம் நாட்டில் ஏற்பட்டபோது அதற்கு எதிராக தமிழ் மக்கள் சார்பில் நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தவர்கள் இடதுசாரி இயக்கத்தினரே, தமிழ் இளைஞர்களின் கையில் எதிர்காலம் தங்கியுள்ளது அவர்கள் தவறான பாதையில் வழிதவறி செல்லக் கூடாது அவர்கள் இடதுசாரித்தலைமையின் கீழ் ஒன்றுபட்டு தங்கள் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும்

மற்றும் எஸ் இராமநாதன் சந்திரசேகரன் ஆகியோர் பேசினார்கள்

சிங்கப்பூர் முதலீட்டையும்

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சிங்கப்பூர் கலாச்சார பிரதி அமைச்சர் திரு ஒங் டெங்சியோஸ், சிரேஷ்ட ராஜாங்க அமைச்சர் திரு கோஸ் சோக் தோங் ஆகியோர் நேற்று இலங்கை சுதந்திர வர்த்தக வலயத்திற்காக திட்டத்தையும் இவர்கள் பாராட்டியுள்ளனர்.

இவ்வலயத்தில் முதலீடு செய்ய சிங்கப்பூர் தயாராக உள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர். [இ-ம]

"சமூக முன்னேற்றமும்

நாட்டின் அபிவிருத்தியுமே

இலங்கை வங்கியின் நோக்கம்"

(யாழ்ப்பாணம்)

"இலங்கை வங்கியின் நோக்கம் பணத்தைச் சேமித்து வைப்பதல்ல, சமூக முன்னேற்றமும், நாட்டின் அபிவிருத்தியுமே வங்கியின் நோக்கமாகும், எமது விவசாயிகள் இன்று பூரிப்போடு இவ்விழாவை வெற்றியுடன் கொண்டாடுவதைப் பார்த்து வங்கி பூரிப்படைகின்றது."

இவ்வாறு கிளிநொச்சியில் நடைபெற்ற இலங்கை வங்கியின் புதுவருட விழாவில் தலைமைவகித்துப் பேசிய இலங்கை வங்கி வடமாநில முகாமையாளர் திரு எம் ஜே ஏ ஜெகநாதன் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

5 வருடங்களுக்கு முன்னர் கிளிநொச்சியில் இலங்கை வங்கியை தொடக்கி கமநலச் சேவை நிலையங்களில் கிளைகளைத் தொடங்கி விவசாயிகளுக்கு உதவியதாலேயே இன்று உங்களுடன் இவ்விழாவைக் கொண்டாட முடிந்தது. உங்களுக்காகவும், நாட்டின் உயர்வுக்காகவும், வங்கியினர் கடமையைத் திறம்படச் செய்கின்றனர். இது உங்கள் வங்கியென நினைத்து எம்முடன் ஒத்துழையுங்கள்.

உங்கள் குறைகளை எம்முடன் கலந்தாலோசித்து உதவிகளைப் பெறுங்கள். விவசாயிகள் நேர்மையும், பண்பும் உடையவர்கள் என முன்னைய நாட்களில் பலர் எழுதியுள்ளனர். எனவே விவசாயிகள் செல்வத்தோடு மட்டும் முன்னேறாமல் குணத்தோடும் முன்னேறவேண்டும்.

கிளிநொச்சி தேசியஅரசுப் பேரவை உறுப்பினர் திரு. வீ. ஆனந்தசங்கரி பேசுகையில் கூறியதாவது:

"கிளிநொச்சியின் சனத்தொகை 20 ஆண்டுகளுக்கு முன் 28,000 ஆக இருந்தது இப்போது 45,000ஆக உயர்ந்துள்ளது. இதற்குக் காரணம் இங்கு போதிய வசதிகள் மக்களுக்கு கிடைப்பதேயாகும். இப்போது இங்கே மக்கள் பெருமளவில் குடியேற விரும்புகின்றனர். மற்றைய தொகுதி மக்கள் யாழ். மாவட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து எனது தொகுதிக்கு 10 லட்சம் ரூபாவை வழங்கியதன் மூலம் நாம் அவர்களுக்கு நன்றியுடையவர்களாக இருக்கின்றோம் என்றார்.

விழாவில் திருவாளர் ச. ச. முருகேசு, கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. த. சிவசுப்பிரமணம், திரு. இராசசேகரன், இ. கிருஷ்ணராசா உட்பட பலர் உரையாற்றினார்கள்.

விழாவில் கிளிநொச்சி திருக்குடும்ப கன்னியர்மட மாணவிகள் தேசியகீதம் இசைத்தார்கள்.

விழாவில் பலகலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. [செ-இ]

விசேஷ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தை நோக்கி வரும் சகல வாகனங்களும் சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றன.

மனைவியும் தலைமறைவாம்!

இதேசமயம் கொலையுண்ட சி. ஐ. டி. இன்ஸ்பெக்டருக்குத் தகவல் கொடுத்ததாகக் கூறப்படும் இளைஞர் ஒருவரின் மனைவியும் திடீரெனத் தலைமறைவாகி விட்டதாகவும் இந்த இளைஞரையும் மனைவியையும் புத்தளப்பகுதியில் பொலிஸார் தேடிவருவதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

சந்தேகநபர்கள் சிலர்பற்றிய தகவல் பொலிஸாருக்குக் கிடைத்துள்ளதாகவும் இவர்களைப் பொலிஸார் பலபிரிவுகளாகச் சென்று தேடிவருவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன,

முருங்கன் பகுதியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் தீவிர தேடுதலவேட்டையில் இறங்கியுள்ளனர். (க-அ)

வீதி ஒழுங்கை—

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பிரிவு இன்ஸ்பெக்டர் திரு. என். சேனாதிராசா நீதவான் முன்னிலையில் ஆஜர்செய்தார்.

அக்கம்பக்கமாக சைக்கிளில் செல்வோருக்கு மன்னிப்புக் கிடையாதென்றும், இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார்களென்றும், இன்ஸ்பெக்டர் சேனாதிராசா தெரிவித்தார்.

போக்குவரத்தைத் தடை செய்யாமல் வீதி ஒழுங்குப்படி சைக்கிளில் செல்லுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (க அ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P, O. Box 49, Jaffna. Telegram 'Eelanaadu' Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.